

# 22.08.2026 செய்திகள்

## மாவட்ட நீதிபதி பணித் தேர்வு: கட்டாய வழக்குரைஞர் பணி அனுபவம் ஓராண்டாகக் குறைப்பு

- சட்ட மாணவர்கள் மாவட்ட நீதிபதி பணி போட்டித் தேர்வில் பங்கேற்க நிர்ணயிக்கப்பட்ட மூன்று ஆண்டுகள் கட்டாய வழக்குரைஞர் பயிற்சியை ஓராண்டாகக் குறைத்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அதே நேரம் இந்த ஓராண்டு பயிற்சி முடித்து நீதிபதி பணித் தேர்வில் தகுதி பெறும் தேர்வர்கள், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி நீதிபதியாக பாதி ஊதியத்தில் பயிற்சி பெறுவதை உச்சநீதிமன்றம் கட்டாயமாக்கியுள்ளது.
- இந்த ஓராண்டு பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சி நீதிபதிகள், நீதிமன்றத்தில் மேலும் ஓராண்டு பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். இதில் முதல் 6 மாதங்கள் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியின் கண்காணிப்பின் கீழும், அடுத்த 6 மாதங்கள் உயர்நீதிமன்ற நீதிபதி கண்காணிப்பின் கீழும் எழுத்தர் பணி பயிற்சி வழங்கப்படும். இந்தப் பயிற்சி முடித்து கண்காணிப்பு உயர்நீதிமன்ற நீதிபதி அளிக்கும் பயிற்சி மதிப்பீடு அறிக்கை திருப்தியளிக்கும் பட்சத்தில், முழு ஊதியத்துடன் முழுநேர மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்படுவர்.

» ஓராண்டு வழக்குரைஞர் பயிற்சி

- 2027-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 - ஆம் தேதிக்குப் பிறகு அறிவிக்கை செய்யப்படும் நீதித்துறைப் பணியாளர் தேர்வில் பங்கேற்பவர்களுக்கு இந்த வழக்குரைஞர் பணி முன் அனுபவ நிபந்தனை பொருந்தும்.
- இவர்களும் நீதிபதி பணித்தேர்வில் தகுதி பெற்ற பிறகு நீதித்துறை அகாதெமியில் பயிற்சி நீதிபதியாக ஓராண்டு எழுத்தர் பணி பயிற்சி பெறுவதும், அடுத்த ஓராண்டுக்கு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதியின் கண்காணிப்பின் கீழ் எழுத்தர் பயிற்சி பெறுவதும் கட்டாயமாகும்.
- இந்த நடைமுறை அடுத்த 5 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும். அதன் பிறகு, தன்னிடம் உள்ள தரவுகளின் அடிப்படையில், இந்த நிபந்தனைகளை உச்சநீதிமன்றம் மறுபரிசீலனை செய்யலாம் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## ஆன்லைன் பத்திர பதிவுக்கான புதிய வழிமுறைகள்

» முதல் கட்டம்

- சொத்து வாங்குவோர், பதிவுத்துறை இணையதளத்தில் தங்கள் பெயரில், 'லாக் இன்' உருவாக்கி, பதிவு செய்ய வேண்டிய பத்திர வகையை தேர்வு செய்ய வேண்டும்
- பதிவு செய்யும் இடத்தில் விரல் ரேகை பதிவு, கருவிழி பதிவு, 'வெப் கேமரா'கருவிகளின் வகை என்ன என்பதை தேர்வு செய்ய வேண்டும் .
- சொத்தின் முன் ஆவண விபரங்களை உள்ளீடு செய்து, அதன் 'டிஜிட்டல்' பிரதியை பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- சொத்து விற்பவர், வாங்குபவர், சாட்சிகள் குறித்த பெயர், முகவரி, அடையாள சான்று விபரங்களை உள்ளீடு செய்ய வேண்டும்.

- விற்பனை செய்யப்படும் சொத்து வீடா, மனையா என்பதை தேர்வு செய்து, அது தொடர்பான அடிப்படை விபரங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.
- சொத்து அமைந்துள்ள சார் – பதிவாளர் அலுவலகம், கிராமம், சர்வே எண், பரப்பளவு , எல்லைகள், குறிப்புகள் போன்ற விபரங்களை உள்ளீடு செய்ய வேண்டும்.
- சொத்து கைமாறும் மதிப்பு என்ன, அது எந்த வகையில் கொடுக்கப்பட்டது என்ற விபரங்களை உள்ளீடு செய்ய வேண்டும்.
- அந்த சொத்து, தற்போது யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை குறிப்பிட வேண்டும்
- அந்த சொத்து தொடர்பான சட்ட நிலை, வழக்கு எதாவது நிலுவையில் உள்ளதா என்பதை குறிப்பிட வேண்டும்.
- இந்த விபரங்கள் அடிப்படையில், தானியங்கி முறையில் உருவாகும் வலைவு பத்திரம் பார்வைக்கு கிடைக்கும்.
- இதன் அடிப்படையில், பத்திரத்தின் சொத்து மதிப்பு சரிபார்க்கப்பட்டு, அதற்கான பதிவு கட்டணம், முத்திரை தீர்வை, கணினி கட்டணம்,ஆவன எழுத்தர் நல நிதி விபரங்கள் திரையில் தோன்றும்.
- இதையடுத்து, வரைவு பத்திரம் சரி பார்க்கப் பட்டு பதிவேற்றம் செய்தால், இணையதளத்தில் அந்த பத்திரம், மை டாக்குமெ ன்ட்ஸ் பிரிவில் வேமிக்கப்படும்.
- இதன்பின், சொத்து வாங்குவோர், விற்பவர் அடையாள சான்றுகள், மனைப்பிரிவு வரைபடம், சொத்தின் புகைப்படம் போன்ற ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

» இரண்டாம் கட்டம்

- இதை தொடர்ந்து, 'மை டாக்குமென்டஸ்' பிரிவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பத்திரத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- அடுத்து, ஆதார் சரிபார்ப்பு, விரல் ரேகை, புகைப்படம், கருவிழி ஆகிய, பயோ மெட்ரிக் விபரங்களை பதிவு செய்ய வேண்டும்,

» மூன்றாம் கட்டம்

- முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் ஆகியவற்றை, ஆன்லைன் முறையில் செலுத்த வேண்டும்.

» நான்காம் கட்டம்

- கட்டணம் செலுத்திய பின், பத்திர பதிவுக்கு, 'ஆன்லைன்' முறையில் தாக்கலுக்கு விண்ணப்பதாரர் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். இத்துடன் விண்ணப்பதாரர் நிலையில் பணிகள் முடிந்து விடும்.

» ஐந்தாம் கட்டம்

- விண்ணப்பதாரர் பதிவேற்றம் செய்த பத்திரம், இணைப்பு ஆவணங்கள், அடையான சான்றுகளை சார் – பதிவாளர், 24 மணி நேரத்தில் சரி பார்த்து முடிவு எடுப்பார். இதன் அடிப்படையில், சார்பதிவாளர் டிஜிட்டல் கையெழுத்து போட்டு, பத்திரப்பதி வை முடித்து வைப்பார் . இதன் பின், விண்ணப்பதாரர் தன், 'லாக் இன்' பிரிவை திறந்தால், அதில் பிரதி எடுப்பதற்கு ஏற்ற நிலையில் பத்திரம் தயாராக இருக்கும்.

SURESH'





| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |